05.08.2016

தினமணி

## இன்றைய வேளாண் செய்திகள்

### கால்நடை பாதுகாப்புத் திட்ட முகாம்

கடமலைக்குண்டு அருகே முத்துலாபுரத்தில் கால்நடைபாதுகாப்பு திட்ட முகாம் புதன்கிழமை நடைபெற்றது.

முகாமுக்கு, அரசு கால்நடை மருத்துவர் வெயிலோன் தலைமை வகித்து, சிகிச்சையளித்தார். முகாமில் தாற்காலிக மலட்டுத்தன்மை நீக்கம், தடுப்பூசி, கருவூட்டல், சினைப் பரிசோதனை, ஆண்மை நீக்கம் மற்றும் பல்வேறு பரிசோதனைகள் நடைபெற்றன. இதில் 300 மாடுகளுக்கும், 527 ஆடுகளுக்கும் பரிசோதனை நடத்தப்பட்டது. மேலும் சிறந்த கன்றுகளுக்கு பரிசுகள் வழங்கப்பட்டன.

### பழப் பயிர் சாகுபடி தொழில் நுட்பக் கருத்தரங்கு

பெரியகுளம் அரசு தோட்டக்கலை கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையத்தில் புதன்கிழமை மா, கொய்யா சாகுபடி நவீன தொழில் நுட்பக் கருத்தங்கு நடைபெற்றது.

தோட்டக்கலை மற்றும் மலைப் பயிர்கள் துறை, தேசிய தோட்டக்கலை இயக்கத் திட்டம், ஒருங்கிணைந்த பழப் பயிர்கள் ஆராய்ச்சித் திட்டம் ஆகியவற்றின் சார்பில் நடைபெற்ற இக்கருத்தரங்குக்கு மாவட்ட ஆட்சியர் ந.வெங்கடாசலம் தலைமை வகித்தார். தோட்டக் கலைக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலைய முதல்வர் த.நா.பாலமோகன், பழவியல் துறைத் தலைவர் ஜே.ராஜாங்கம், ஒருங்கிணைந்த பழப் பயிர்கள் ஆராய்ச்சித் திட்ட ஒருங்கிணைப்பாளர் பிரகாஷ்பட்டேல், மாவட்ட தோட்டக் கலை துணை இயக்குநர் கிஷோர்குமார் உள்ளிட்டோர் பங்கேற்றனர்.

## ரூ.9.35 லட்சத்துக்கு பருத்தி ஏலம்

அவிநாசியில் ரூ.9.35 லட்சத்துக்கு பருத்தி ஏலம் புதன்கிழமை நடைபெற்றது.

அவிநாசி வேளாண்மை உற்பத்தியாளர்கள் கூட்டுறவு விற்பனைச் சங்கத்தில் வாரந்தோறும் பருத்தி ஏலம் நடைபெற்று வருகிறது. இந்த வாரம் நடைபெற்ற ஏலத்தில் 440 மூட்டைகள் கொண்டு வரப்பட்டிருந்தன. அதில், ஆர்.சி.எச் ரகப் பருத்தி குவிண்டாலுக்கு ரூ.5,000 முதல் ரூ.5,760 வரையிலும், மட்ட ரகப் பருத்தி ரூ.1,500 முதல் ரூ.2,000 வரையிலும் ஏலம் போனது. மொத்தம் ரூ.9 லட்சத்து 35 ஆயிரத்துக்கு பருத்தி வர்த்தகம் நடைபெற்றது.

இந்த ஏலத்தில், பென்னாகரம், கிணத்துக்கடவு, கோபி, நம்பியூர், அன்னூர், திருப்பூர், பல்லடம், சேவூர், குன்னத்தூர், அவிநாசி, புளியம்பட்டி, மேட்டூர், அன்னூர் ஆகிய பகுதிகளிலிருந்து 52 பருத்தி விவசாயிகளும், கோவை, ஈரோடு பகுதியிலிருந்து 7 பருத்தி வியாபாரிகளும் ஏலத்தில் கலந்து கொண்டனர்.

## பரமத்திவேலூர் ஏல மையத்தில் கொப்பரைத் தேங்காய் விலை உயர்வு

பரமக்திவேலார் சேலம் ஒழுங்கு முறை விற்பனை கூடக்கில் வியாழக்கிழமை நடைபெற்ற ஏலத்தில் கொப்பரைத் தேங்காய் அதிக விலைக்கு விலைபோனது.

பரமக்தி வேலார் வெங்கமேட்டில் உள்ள சேலம் ஒழுங்குமுறை விற்பனை கூடக்துக்கு அகன் சுற்றுவட்டாரப் பகுதிகளிலிருந்து கொப்பரைக் கேங்காய் கொண்டு வரப்பட்டு ஒவ்வொரு வியாழக்கிழமையும் ஏலம் நடைபெறுகிறது.

கடந்த வாரம் 2,428 கிலோ கொப்பரைத் தேங்காய் ஏலத்துக்குக் கொண்டு வரப்பட்டிருந்த நிலையில், நிகழ் வாரம் வியாழக்கிழமை நடைபெற்ற ஏலத்துக்கு விவசாயிகள் 1,666 கிலோ கொப்பரைத் தேங்காய் கொண்டு வந்திருந்தனர். தொடர்ந்து நடைபெற்ற ஏலத்தில், கிலோ ஒன்று அதிகபட்சமாக ரூ.52.45 பைசாவிற்கும், குறைந்தபட்சமாக ரூ.50.25 பைசாவிற்கும், சராசரியாக ரூ.51.15 பைசாவிற்கும் ஏலம் போனது. வரக்குக் குறைவால் கொப்பரையின் விலை உயர்ந்துள்ளதாக விவசாயிகள் தெரிவித்தனர்.

## முட்டை விலை

நாமக்கல் மண்டல தேசிய முட்டை ஒருங்கிணைப்புக்குழு வியாழக்கிழமை அறிவித்த முட்டை பண்ணைக் கொள்முதல் விலை நாமக்கல்லில் ரூ.4.15, சென்னையில் ரூ.4.60.

கறிக்கோழி விலை

பல்லடம் பிராய்லர் ஒருங்கிணைப்புக்குழு வியாழக்கிழமை அறிவித்த கறிக்கோழி பண்ணைக் கொள்முதல் விலை கிலோ ரூ.64, முட்டைக்கோழி கிலோ ரூ.81.

## மேட்டூர் அணை நீர்மட்டம் 60 அடியைத் தாண்டியது

மேட்டூர் அணையின் நீர்மட்டம் வியாழக்கிழமை காலை 60 அடியைத் தாண்டியது.

காவிரியின் நீர்ப்பிடிப்புப் பகுதிகளில் ஜூன் மாதம் மழை இல்லாத காரணத்தால் அப்போது அணையின் நீர்மட்டம் வேகமாக சரிந்து வந்தது. ஜூன் 19ஆம் தேதி மேட்டூர் அணையின் நீர்மட்டம் 42.46 அடியாக இருந்தது. அப்போது அணைக்கு நொடிக்கு 112 கன அடி வீதம் தண்ணீர் வந்து கொண்டிருந்தது. ஜூன் இறுதியில் காவிரியின் நீர்ப்பிடிப்புப் பகுதிகளில் தென்மேற்குப் பருவமழை பெய்ததால் மேட்டூர் அணைக்கு நீர்வரத்து கணிசமாக உயர்ந்தது.

பருவமழையின் காரணமாக மேட்டூர் அணைக்கு நீர் வரத்து இருந்ததால் வியாழக்கிழமை காலை மேட்டூர் அணையின் நீர்மட்டம் 60.15 அடியாக உயர்ந்தது. அணைக்கு நொடிக்கு 4,446 கனஅடி வீதம் தண்ணீர் வந்து கொண்டிருந்தது. அணையிலிருந்து குடிநீர் தேவைக்காக நொடிக்கு 500 கனஅடி வீதம் தண்ணீர் திறக்கப்பட்டிருந்தது. அணையின் நீர் இருப்பு 24.79 டி.எம்.சியாக இருந்தது.

## நெல்லைக்கு 1000 டன் நெல் அரவைக்காக அனுப்பி வைப்பு

நீடாமங்கலத்திலிருந்து திருநெல்வேலிக்கு ஆயிரம் டன் பொதுரக நெல் அரவைக்காக வியாழக்கிழமை அனுப்பி வைக்கப்பட்டது.

பாமணி மத்திய சேமிப்புக் கிடங்கு, சுந்தரக்கோட்டை நவீன அரிசி ஆலை மற்றும் திறந்தவெளி சேமிப்பு மையங்களிலிருந்து நெல் நீடாமங்கலம் ரயில் நிலையத்திற்கு கொண்டுவரப்பட்டது.

நுகர்பொருள் வாணிபக்கழக அலுவலர்கள் முன்னிலையில் நெல் மூட்டைகள் அரவைக்காக திருநெல்வேலிக்கு அனுப்பிவைக்கப்பட்டது.

தினமலர்

**இன்றைய வேளாண் செய்திகள்**

## நடவுகால பழமொழிகள்

ஆடியில் தான் விதைப்பும், நடவும் நடக்கின்றன. நடவுகால பழமொழிகள் பல விவசாயிகளுக்கு வழிகாட்டுவது போல் உள்ளது. 'அகல உழுவதை விட ஆழ உழு' என ஒரு பழமொழி உள்ளது. 'உழுகிற மாட்டை நுகத்தால் அடித்தது போல' என ஒரு பழமொழி உள்ளது. நுகம் என்பது ஏரை மாட்டின் கழுத்தில் இணைப்பதற்கான நீண்ட உறுதியான தடியைக் குறிக்கிறது. புதுமணத் தம்பதியர் வாழ்நாள் முழுவதும் நுகத்தடியில் பூட்டப்பட்ட இரு மாடுகளைப் போல் இணைந்து இருக்க வேண்டும் என்பதை வலியுறுத்தும் வகையில் தான் திருமணச் சடங்குகளில் 'நுகத்தடி ' பயன்படுத்தப்படுகிறது. 'ஏர்' உழுகிறவன் இளப்பமானால், எருது மச்சான் முறை கொண்டாடும், என ஒரு பழமொழி உள்ளது.

## தக்காளி விலை குறைவு பயிரிட்ட விவசாயிகள் பாதிப்பு

ஒட்டன்சக்கிரம், நீரின்றி நோய் காக்குகல் மற்றும் விலை குறைவால் ஒட்டன்சத்திரம் பகுதியில் தக்காளி பயிரிட்ட விவசாயிகள் பாதிக்கப்பட்டுள்ளனர். விவசாய விளை பொருட்களுக்கு எப்போதுமே ஒரு நிரந்தர விலை என்பது கிடையாது. இதனால் நன்றாக விளைச்சல் இருந்தாலும், உரிய விலை கிடைக்காமல் பாதிக்கப்படுவது தொடர்கதையாக உள்ளது. ஒட்டன்சத்திரம், தொப்பம்பட்டி ஒன்றிய பகுதிகளில் உள்ள கிராமங்களில் ஒட்டு ரக தக்காளி அதிகமாக பயிரிடப்பட்டு வருகிறது. கடந்த சில நாட்களாக தக்காளி கிலோ ரூ.10க்கும் கீழ் விற்கிறது. நல்ல தரமுள்ள தக்காளிக்கு மட்டுமே அதிகபட்ச விலை கிடைக்கிறது. நடுத்தரம் மற்றும் கடைசி ரக தக்காளிக்கு மிகக் குறைந்த விலையே கிடைத்து வருகிறது. தற்போதைய விலையானது, தக்காளியை பறிக்கும் கூலிக்கு கூட கட்டுபடியாகாது. இத்துடன் போதிய நீர் பாய்ச்ச முடியாமல் நோய் தாக்குதல் ஏற்பட்டால் தக்காளி மகசூல் பெரிதும் பாதிக்கப்படும். ஒட்டன்சத்திரம் விவசாயி ஓருவர் கூறுகையில், “ஒரு ஏக்கர் தக்காளி நடுவதற்கு ரூ.25 ஆயிரம் செலவாகிறது. ஆனால் அதிலிருந்து பெறப்படும் தக்காளி ரூ.10 ஆயிரத்திற்கு மட்டுமே விற்க முடிகிறது. இதனால் விவசாயிகள் பாதிக்கப்பட்டுள்ளனர்,” என்றார்.

## சான்று பெற்ற விதைகளை பயன்படுத்த வேண்டுகோள்

கரூர்: 'நல்ல மகசூல் பெற, சான்று பெற்ற விதைகளை பயன்படுத்த வேண்டும்' என, கரூர் விதைச்சான்று உதவி இயக்குனர் துரைசாமி கூறியுள்ளார்.

இது குறித்து, அவர் வெளியிட்டுள்ள அறிக்கை: விதைப்புக்கு பயன்படுத்தும் விதைகள், தரமானதாக இல்லாவிட்டால் மொத்த விளைச்சல் பாதிக்கப்படும். நல்ல மகசூல் பெற, தரமான விதைச்சான்று விதைகளை பயன்படுத்த வேண்டும். தரமான விதைகள் நல்ல முளைப்புத்திறன், புறத்தூய்மை, அளவான ஈரப்பதம், பிற ரக கலப்பு இல்லாமை, பூச்சி நோய் தாக்குதல் இல்லாமல் இருக்க வேண்டும். மத்திய அரசால் அறிவிக்கப்பட்ட பயிர் ரகங்களில் சான்று விதை உற்பத்தி செய்யப்படுகிறது. எனவே, விதை உற்பத்தி செய்ய விரும்பும் உற்பத்தியாளர்கள், விதைப்பயிர் விதைப்பு செய்த, 35 நாட்களுக்கு கரூர் விதைச்சான்று உதவி

இயக்குனர் அலுவலகத்தில் உரிய கட்டணத்துடன், உரிய படிவத்தில் பதிவு செய்ய வேண்டும். பதிவு செய்யப்பட்டவுடன் விதைச்சான்று அலுவலர்களால் வளர்ச்சிப் பருவம், பூப்பருவம் அறுவடைப் பருவம் ஆகிய கால கட்டங்களில் வயல் ஆய்வு செய்யப்படும். வயல் தரங்களில் தேறும் பட்சத்தில் அறுவடைக்கு அனுமதிக்கப்படும். மேலும், விதை சுத்திகரிப்பு நிலையத்தில், சுத்திகரிப்பு செய்த விதை குவியல்களில் இருந்து விதைச்சான்று அலுவலரால் விதை மாதிரிகள் எடுக்கப்பட்டு பரிசோதனைக்காக அனுப்பப்படும். அங்கு ஆய்வு செய்யப்பட்டு முடிவுகள் அறிவிக்கப்படும். இவ்வாறு ஒவ்வொரு கட்டத்திலும் விதைகளின் வயல் தரம் மற்றும் விதைத் தரம் உறுதி செய்யப்படுகிறது. ஒரே நேரத்தில் அறுவடை செய்யலாம். பயிரில் கலப்படம் இன்றி அதிக மகசூல் பெறலாம். இவ்வாறு அவர் கூறியுள்ளார்.

## மாயனூர் விவசாயிகளுக்கு விதை நெல் வழங்கும் விழா

கிருஷ்ணராயபுரம்: கிருஷ்ணராயபுரம் அருகே உள்ள, மாயனூர் வேளாண்மை துறை சார்பில், புதிய ரக நெல் சாகுபடி செய்ய, விதைகள் வழங்கும் விழா மாயனூரில் நடந்தது. வேளாண்மை இணை இயக்குனர் அல்தாப் தலைமை வகித்தார். கிருஷ்ணராயபுரம் துணை இயக்குனர் திலகராஜ் வரவேற்றார். கிருஷ்ணராயபுரம் யூனியனுக்கு உட்பட்ட பகுதிகளில் உள்ள விவசாயிகள், ஆடி மாதத்தை முன்னிட்டு நெல் நடவு செய்தால் விளைச்சல் நன்றாக இருக்கும். அதன்படி, விவசாயிகளுக்கு இந்தாண்டு புதிய ரக நெல் சாகுபடி செய்ய விதைகள் வழங்கப்படுகிறது. இதை விவசாயிகள் பயன்படுத்தி கொள்ள வேண்டும் என, வலியுறுத்தப்பட்டது. வேளாண்மை அலுவலர் விஜயகுமார் உள்பட பலர் கலந்து கொண்டனர்.

## பயறு வகை உற்பத்திக்கு மானியத்திட்டங்கள்: விவசாயிகள் பயன்பெற கலெக்டர் அழைப்பு

சேலம்: சேலத்தில், பயறு வகை உற்பத்தியை ஊக்குவிக்க, வேளாண் துறையில் வழங்கப்படும் மானிய திட்டங்களில், விவசாயிகள் பயன்பெற வேண்டும் என, மாவட்ட கலெக்டர் சம்பத் தெரிவித்துள்ளார்.

இதுகுறித்து, அவர் கூறியிருப்பதாவது: சேலத்தில், பயறு வகை பயிர்கள் சராசரியாக ஆண்டுதோறும், 50 ஹெக்டேர் சாகுபடி செய்யப்பட்டு, 26 ஆயிரத்து,

700 மெட்ரிக் டன் என்ற அளவில் உற்பத்தி செய்யப்படுகிறது. நடப்பாண்டில், 65 ஆயிரம் ஹெக்டேரில், பயறு வகை சாகுபடி செய்ய இலக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளது. தனிப்பயிர் சாகுபடி மட்டுமின்றி, வரப்பு பயிராக நிலக்கடலை, கரும்பு, பருத்தி மற்றும் தோப்புகளில் ஊடுபயிராகவும் சாகுபடி செய்ய நடவடிக்கை எடுக்கப்படுகிறது. உற்பத்தி திறனையும், உற்பத்தியையும் பெருக்கிட, தேவையான உயர் விளைச்சல் ரகங்களின் சான்று பெற்ற விதைகள் மற்றும் இடுபொருட்கள் மானிய விலையிலும், அவ்வப்போது, தேவைப்படும் தொழில்நுட்பங்களை விழிப்புணர்வு முகாம் மற்றும் பயிற்சி வழங்கப்படுகிறது. பயறு வகை உற்பத்தியை அதிகரிக்க, தேசிய வேளாண்மை வளர்ச்சி திட்டத்தில், 1.58 கோடி ரூபாயும், தேசிய உணவு பாதுகாப்பு திட்டத்தில், 2.50 கோடி ரூபாயும் ஒதுக்கீடு பெறப்பட்டு, மானியத்திட்டங்களாக செயல்படுத்தப்பட உள்ளன. பயறு உற்பத்திக்காக வழங்கப்படும் மானியத்திட்டங்களை வேளாண் துறை மூலம் அறிந்து, விவசாயிகள் பயன்பெற வேண்டும். இவ்வாறு அவர் கூறியுள்ளார்.

## உலர் நிலக்கடலை விலை உயர்வு எதிரொலி: கொளத்தூரில் சாகுபடி பரப்பளவு அதிகரிப்பு

கொளத்தூர்: உலர் நிலக்கடலை விலை உயர்ந்ததால், கொளத்தூர் ஒன்றியத்தில், நடப்பாண்டு, சாகுபடி பரப்பு அதிகரித்துள்ளது.

சேலம் மாவட்டம், கொளத்தூர் ஒன்றியத்தில், 9,700 ?ஹக்டேர் நிலம் சாகுபடிக்கு உகந்தாக உள்ளது. இதில், ஆண்டுதோறும் விவசாயிகள் நெல், வேர்கடலை, வாழை, மிளகாய் உள்ளிட்ட பயிர்களை அதிக அளவில் சாகுபடி செய்கின்றனர். நடப்பாண்டு ஆடிப்பட்டத்தில் பயறுவகை பயிர்களை விவசாயிகள் ஆர்வத்துடன் சாகுபடி செய்கின்றனர். கொளத்தூர் வேளாண் உதவி இயக்குனர் அலுவலகம் மூலம், இதுவரை, 4 டன் தட்டபயிறு, ஒரு டன் உளுந்து, முக்கால் டன், பச்சை பயிறு விதைகள் விவசாயிகளுக்கு விற்பனை செய்யப்பட்டுள்ளது. நடப்பாண்டு ஆடிப்பட்டம் சாகுபடிக்காக விவசாயிகள் இதுவரை அதிகபட்சமாக, 13 டன் நிலக்கடலை விதைகளை கொள்முதல் செய்துள்ளனர். இதனால், நடப்பாண்டு கொளத்தூர் ஒன்றியத்தில் நிலக்கடலை அதிக பரப்பளவில் சாகுபடி செய்யப்படும் என, எதிர்பார்க்கப்படுகிறது.

கொளத்தூர் வேளாண் அலுவலர்கள் கூறியதாவது: கடந்த ஆண்டு கொளத்தூர் ஒன்றியத்தல் விவசாயிகள், 450 ஹெக்டேர் வரை, நிலக்கடலை சாகுபடி செய்தனர். நடப்பாண்டு உலர் நிலக்கடலை, ஒரு குவிண்டால், 6,000 ரூபாயாக விலை அதிகரித்துள்ளது. இதனால், கொளத்தூர் ஒன்றியத்தில் நடப்பாண்டு, 600 ஹெக்டேர் வரை, விவசாயிகள் நிலக்கடலை சாகுபடி செய்ய வாய்ப்புள்ளது. கடந்த சில ஆண்டுகளை விட நடப்பாண்டு நிலக்கடலை சாகுபடி பரப்பளவு அதிகரித்துள்ளது குறிப்பிடத்தக்கது. இவ்வாறு அவர்கள் கூறினர்.

## ரூ.45 லட்சத்துக்கு பருத்தி வர்த்தகம்

நாமக்கல்: நாமக்கல், என்.சி.எம்.எஸ்.,ல், 2300 பருக்கி மூட்டைகள், 45 லட்சம் ரூபாய்க்கு ஏலம் விடப்பட்டன. நாமக்கல் மற்றும் சுற்று வட்டார பகுதிகளான பரமத்தி, திருச்செங்கோடு, ராசிபுரம், நாமகிரிப்பேட்டை, சேந்தமங்கலம், புதுப்பாளையம், கல்யாணி உள்ளிட்ட பகுதிகளில், 2,500 ?ஹக்டேர் பரப்பளவில் பருத்தி சாகுபடி செய்யப்படுகிறது. அறுவடை செய்யப்படும் பருத்தி ரகங்கள், நாமக்கல் என்.சி.எம்.எஸ்., குடோனுக்கு வாரம்தோறும் வியாழக்கிழமை நடக்கும் ஏலத்துக்கு கொண்டு வரப்படுகிறது. நேற்று நடந்த ஏலத்தில், ஆர்.சி.?ஹச்., குறைந்தபட்சம், 5,126 ரூபாய், அதிகபட்சம், 5,799 ரூபாய், சுரபி ரகம் குறைந்தபட்சம், 5,529 ரூபாய், அதிகப்பட்சம், 6,350 ரூபாய்க்கும் விற்பனையானது. மொத்தம், 2300 பருத்தி மூட்டைகள், 45 லட்சம் ரூபாய்க்கு விற்பனையானது.

தினகரன்

## இன்றைய வேளாண் செய்திகள்

### வேளாண் நிலையத்தில் முயல் வளர்ப்பு பயிற்சி : அதிகாரி தகவல்

நாமக்கல்: நாமக்கல் மோகனூர் சாலையில் கால்நடை மருத்துவக்கல்லூரி வளாகத்தில் அமைந்துள்ள வேளாண் அறிவியல் நிலையத்தில், வரும் 10ம் தேதி ‘முயல் வளர்ப்பு’ என்ற தலைப்பில் ஒரு நாள் இலவச பயிற்சி நடைபெற உள்ளது. மாவட்ட வேளாண் அறிவியல் நிலைய இணைப் பேராசிரியர் மற்றும் தலைவருமான அகிலா வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில் தெரிவித்ததாவது:

நாமக்கல் மோகனூர் சாலையில் கால்நடை மருத்துவக்கல்லூரி வளாகத்தில் அமைந்துள்ள வேளாண் அறிவியல் நிலையத்தில், வரும் 10ம் தேதி (புதன்கிழமை) காலை 9 மணிக்கு‘முயல் வளர்ப்பு’ என்ற தலைப்பில் ஒரு நாள் இலவசப் பயிற்சி நடைபெற உள்ளது. இப்பயிற்சியில் முயல் வளர்ப்பின் பயன்கள், முயல் இனங்கள், முயல்களை தேர்ந்தெடுத்தல், இனப்பெருக்க முறைகள், தகவல் மேலாண்மை, நோய்களும், நோய் தடுப்பு முறைகளும் மற்றும் இறைச்சி முயல் வளர்ப்பு பொருளாதாரம் குறித்து பயிற்சி அளிக்கப்படும்.

இதில், அனைத்து விவசாயிகள், பண்ணையாளர்கள், ஊரக மகளிர், இளைஞர்கள் மற்றும் ஆர்வமுள்ள அனைவரும் பங்கேற்கலாம். பயிற்சியில் பங்கேற்க விரும்புவோர் வேளாண் அறிவியல் நிலையத்தில் வரும் 9ம் தேதிக்குள் (செவ்வாய்க்கிழமை) தங்களது பெயரை முன்பதிவு செய்து கொள்ள வேண்டும். இவ்வாறு அவர் செய்திக்குறிப்பில் தெரிவித்துள்ளார்.

## புதன் சந்தையில் ஆடுகள் விலை உயர்வு

சேந்தமங்கலம்: மாவட்டத்தில் தொடர்ந்து மழை பெய்வதாலும், ஆடி மாதம் கோயில் திருவிழா காரணமாக புதன் சந்தையில் ஆடுகள் விலை உயர்ந்தது. நாமக்கல் மாவட்டம், புதன்சந்தை தமிழக அளவில் பிரசித்தி பெற்ற ெபரிய சந்தையாகும். இங்கு செவ்வாய்கிழமை மாட்டுச்சந்தையும், புதன்கிழமை ஆட்டுச்சந்தையும் கூடுவது வழக்கம். சுற்றுவட்டார பகுதியில் இருந்து ஏராளமான ஆடுகள், குட்டிகள், கிடா விற்பனைக்கு வரும். நாமக்கல், சேந்தமங்கலம், எருமப்பட்டி, பவித்திரம், புதுச்சத்திரம் உள்ளிட்ட பகுதிகளிலிருந்து ஏராளமான வியாபாரிகள் மற்றும் விவசாயிகள் ஆடுகள் வாங்க வருகின்றனர்.

நேற்று கூடிய ஆட்டுச்சந்தையில் சுற்றுப்பகுதியிலிருந்து அதிகளவில் ஆடுகள் விற்பனைக்கு வந்திருந்தது. மாவட்டத்தில் கடந்த சில நாட்களாக நல்ல மழை பெய்துள்ளதாலும், ஆடி மாத கோயில் திருவிழாக்களுக்கு இறைச்சி அதிகரித்துள்ளது. இதனால் சந்தையில் 10 கிலோ எடை கொண்ட இறைச்சி ஆடு ரூ.3,700 க்கும், வளர்ப்பு ஆடு ரூ. 3,900க்கும். பிறந்து ஒரு மாதமே ஆன பெண் குட்டி ஆடு ரூ. 500க்கும், கிடா குட்டி ரூ. 600க்கும் விற்பனையானது.

## மக்காச்சோளம் சாகுபடி செய்வதில் விவசாயிகள் ஆர்வம்

தர்மபுரி: தர்மபுரி மாவட்டத்தில் மக்காச்சோளம் சாகுபடி செய்வதில் விவசாயிகள் ஆர்வம் காட்டி வருகின்றனர்.

தர்மபுரி மாவட்டத்தில் 6,000 ஏக்கரில் மக்காச்சோளம் சாகுபடியில் விவசாயிகள் ஆர்வம் காட்டி வருகின்றனர். தர்மபுரி, பென்னாகரம், பாலக்கோடு, பாப்பிரெட்டிப்பட்டி, அரூர், நல்லம்பள்ளி, காரிமங்கலம் ஆகிய தாலுகாவில் இறைவை மற்றும் மானாவாரியில் பரவலாக மக்காச்சோளம் சாகுபடி செய்யப்பட்டுள்ளது. இந்த பயிருக்கு அதிக தண்ணீர் தேவையில்லை. குறுகிய காலத்தில் மகசூல் தரக்கூடிய பயிராக உள்ளது.

இதுகுறித்து விவசாயிகள் கூறியதாவது: மக்காச்சோளம் உற்பத்தி செலவு குறைவு. அதிக உரம் பூச்சி மருந்து மற்றும் பராமரிப்பு அதிகம் தவையில்லை. ஓரளவு கட்டுப்படியாகக்கூடிய விலையும் கிடைக்கிறது. 110 நாளில் அறுவடைக்கு தயாராகிறது. சொட்டுநீர் பாசனத்தில் அதிகப்படியாக விவசாயிகள் சாகுபடி செய்து வருகின்றனர். ஏக்கருக்கு 8 கிலோ மக்காசோள விதைகள் தேவைப்படும். செடிக்கு ஒரு அடியும், வரிசைக்கு வரிசை ஒரு அடியும் இடைவெளி விட்டு நடவு செய்யவேண்டும்.

ஒன்றரை அடி லேட்டரல் குழாய்களை ஒன்றரை அடி இடைவெளியில் தண்ணீர் சொட்டுவது போல் அமைக்கவேண்டும். வரிசைக்கு வரிசை 3 அடி இடைவெளியில் இந்தக் குழாய்களை அமைத்தால் போதும். ஏக்கருக்கு 3 டன் மகசூல் கிடைக்கிறது. இவ்வாறு அவர்கள் கூறினர்.

## விவசாயிகளுக்கு வேளாண் இடுபொருட்கள் வழங்கல்

திருச்சி,: திருச்சி மாவட்ட நீர்வடிப்பகுதி மேம்பாட்டு முகமை மூலம் புள்ளம்பாடி வட்டாரத்தில் ஊட்டத்துார், நம்புகுறிச்சி, சிறுகளப்பூர், கருடமங்கலம், அழுந்தலைப்பூர், தெரணிப்பாளையம், காணக்கியநல்லுார், வரக்குப்பை உள்ளிட்ட நீர்வடிப்பகுதிகளில் விவசாயிகளின் பண்ணை உற்பத்தி மற்றும் வருமானத்தினை பெருக்கிட இடு பொருட்கள் வழங்கும் விழா புள்ளம்பாடி சமுதாய கூடத்தில் நடந்தது. மாவட்ட வேளாண் இணை இயக்குனர் சந்திரசேகரன் தலைமை வகித்து பேசுகை யில், வேளாண்மையில் அதிக மகசூல் பெறுவதற்கான தொழில் நுட்ப கருத்துக்களை விவசாயிகளுக்கு விளக்கப்பட்டு வருகிறது. இத்திட்டத்தின் கீழ் ரூ.25லட்சம் மதிப்பில் இடு பொருட்கள் வழங்கப்பட உள்ளன. மேலும் இத்திட்டத்தின் தோட்டக்கலை பயிர்களான மா மற்றும் எலுமிச்சை கன்றுகள், வேளாண் காடுகள் திட்டத்தில் தேக்கு, சவுக்கு, மரக்கன்றுகள் விவசாயிகளுக்கு வழங்கப்பட உள்ளது. தீவனப்பயிர் மேம்பாட்டு திட்டத்தின் கீழ் தீவனம் சோளம், பயிர் செயல் விளக்க திட்டத்தின் கீழ் வீரிய ஒட்டு மக்காசோள விதைகள் விவசாயிகளுக்கு மானிய விலையில் வழங்கப்பட்டஐ. விழாவில் வேளாண் துணை இயக்குனர்கள், உதவி இயக்குனர்கள், நீர்வடிப்பகுதி ஊராட்சி தலைவர்கள் மற்றும் நீர்வடிப்பகுதி வளர்ச்சி அணி உறுப்பினர்கள், விவசாயிகள் கலந்து கொண்டனர்.

## தோட்டக்கலை பண்ணை ஆய்வு

ராமநாதபுரம், :மண்டபம் ஊராட்சி ஒன்றியத்தில் மாவட்ட ஊரக வளர்ச்சி முகமையின் கீழ் சுந்தரமுடையான் மாதிரி தோட்டக்கலை பண்ணை இயங்கி வருகிறது. இப்பண்ணையில் மாவட்டத்தில் நிலவும் தட்பவெப்ப நிலை, பருவநிலை மற்றும் மண்வளத்தைப் பொறுத்து வேளாண் பெருமக்கள் பல்வேறு தோட்டக்கலைப் பயிர்களை பாரம்பரிய முறையில் சாகுபடி செய்து வருகின்றனர். மா, நெல்லி, சப்போட்டா, வாழை, கொய்யா போன்ற பழப்பயிர்களும், வெண்டை, தக்காளி, கத்தரி, கொத்தவரை போன்ற காய்கறிப் பயிர்களும், முந்திரி, மிளகாய், கொத்தமல்லி, மல்லிகை போன்ற மலர் பயிர்கள் உள்ளிட்ட பல்வேறு மரக்கன்றுகள் மற்றும் செடிகள் சாகுபடி செய்யப்பட்டு பராமரிக்கப்பட்டு வருகிறது. இந்த பண்ணையை நேற்று கலெக்டர் நடராஜன் ஆய்வு செய்து, சாலையோரங்களில் நிழல் தரும் மரங்கள் நடும் திட்டத்தின் கீழ் நடுவதற்காக பராமரிக்கப்பட்டு வரும் 2 லட்சம் மரக்கன்றுகளை பார்வையிட்டார். தொடர்ந்து மாங்கன்று ஒட்டுக்கட்டும் பணிகளையும் பார்வையிட்டு, மரக்கன்றுகளை பராமரிக்கும் முறைகள் குறித்து தோட்டக்கலை துறை அலுவலர்களிடம் கேட்டறிந்தார். ஆய்வின் போது கோட்டாட்சியர் (பொ) ராஜசேகரன், தோட்டக்கலைத் துறை உதவி இயக்குநர் நாகராஜன் மற்றும் பண்ணை அலுவலர்கள் உடனிருந்தனர்.

**இன்றைய வேளாண் செய்திகள்**

**பூச்சி மருந்துகள் பயன்படுத்தப்பட்ட காய்கறிகள் உபயோகத்தை தடுக்க ஒவ்வொரு வீட்டிலும் தோட்டங்களை அமைத்து காய்கறிகளை உற்பத்தி செய்ய வேண்டும் தொழில்துறை மந்திரி வேண்டுகோள்**



திருவனந்தபுரம்,

பூச்சி மருந்துகள் பயன்படுத்தப்பட்ட காய்கறி உபயோகத்தை தடுக்க கேரளாவில் ஒவ்வொரு வீட்டிலும் தோட்டங்களை அமைத்து காய்கறிகளை உற்பத்தி செய்ய வேண்டும் என்று தொழில்துறை மந்திரி ராமகிருஷ்ணன் தெரிவித்தார்.

காய்கறி தோட்டம்

கேரள தொழில்துறை மந்திரியாக இருப்பவர் ராமகிருஷ்ணன். இவர் வசித்து வரும் நந்தன்கோட்டில் உள்ள அரசு வீட்டின் வளாகத்தை சுற்றிலும் காய்கறி செடிகளை நட்டு பராமரிக்க திட்டமிட்டார். அதன்படி நேற்று அவருடைய வீட்டை சுற்றிலும் உள்ள வளாகத்தில் இயற்கை உரங்களை பயன் படுத்தி அமைக்கப்பட்ட

தோட்டத்தில் செடிகளை நட்டு திட்டத்தை தொடங்கி வைத்தார். அப்போது அவரது மனைவி நளினி உடன் இருந்தார். பின்னர் அவர் செய்தியாளர்களிடம் மந்திரி ராமகிருஷ்ணன் கூறியதாவது:–

<u>உற்பத்தியில் தன்னிறைவு</u>

தன் கையே தமக்கு உதவி என்பதை போல், ஒவ்வொருவரும் தங்களது வீடுகளில் இருக்கும் இடத்திற்கு ஏற்றார் போல் தோட்டங்களை அமைத்து காய்கறிகளை உற்பத்தி செய்து தன்னிறைவு பெற வேண்டும். பூச்சி மருந்துகள் பயன்படுத்தப்பட்டு, அண்டை மாநிலங்களில் இருந்து வரும் காய்கறிகள், பழங்களின் உபயோகத்தை தடுக்க இதுவே ஒரே வழி. கூடுதலாக உற்பத்தி செய்யப்படும் காய்கறிகளை சந்தைகளில் விற்று பணம் சம்பாதிக்க முடியும். எல்லோரும் முன்வந்தால் உணவு உற்பத்தியில் கேரளம் தன்னிறைவு பெற முடியும். மக்களின் ஒருங்கிணைந்த கூட்டு முயற்சி இதற்கு தேவை. பேட்டியின் போது, முதன்மை வேளாண் அதிகாரி சுரேஷ், இணை இயக்குனர் பிரபு, விவசாய துறை அதிகாரி மினி உட்பட ஏராளமானோர் கலந்து கொண்டனர்.

### நாமக்கல்லில் ரூ.45 லட்சத்துக்கு பருத்தி ஏலம்



நாமக்கல், நாமக்கல் கூட்டுறவு சங்கத்தில் நேற்று 2,300 மூட்டை பருத்தி ரூ.45 லட்சத்துக்கு ஏலம் போனது.

## பருத்தி ஏலம்

நாமக்கல் – திருச்செங்கோடு ரோட்டில் உள்ள வேளாண்மை உற்பத்தியாளர்கள் கூட்டுறவு விற்பனை சங்க வளாகத்தில் வியாழக்கிழமை தோறும் பருத்தி ஏலம் நடைபெற்று வருகிறது. வழக்கம்போல் நேற்று சங்கத்தின் தலைவர் தென்னரசு மற்றும் அதிகாரிகள் முன்னிலையில் பருத்தி ஏலம் நடந்தது.

இந்த பருத்தி ஏலத்துக்கு நாமக்கல், எருமப்பட்டி, சேந்தமங்கலம், நாமகிரிப்பேட்டை, ராசிபுரம், பவித்திரம், வேலகவுண்டம்பட்டி, புதுச்சத்திரம் என மாவட்டம் முழுவதும் இருந்தும், அண்டை மாவட்டங்களில் இருந்தும் விவசாயிகள் 2,300 மூட்டை பருத்தியை விற்பனைக்கு கொண்டு வந்து இருந்தனர்.

## ரூ.45 லட்சத்துக்கு ஏலம்

இந்த பருத்தி மூட்டைகள் ஏறத்தாழ ரூ.45 லட்சத்துக்கு ஏலம் போனது. ஆர்.சி.எச்.ரக பருத்தி குவிண்டால் ஒன்றுக்கு ரூ.5 ஆயிரத்து 126 முதல் ரூ.5 ஆயிரத்து 799 வரையிலும், சுரபி ரக பருத்தி ரூ.5 ஆயிரத்து 529 முதல் ரூ.6 ஆயிரத்து 350 வரையிலும் ஏலம் போனது.

இந்த பருத்தி மூட்டைகளை கோவை, அவினாசி, திருப்பூர், திருச்செங்கோடு, கொங்கணாபுரம் உள்ளிட்ட பகுதிகளில் இருந்து வந்த வியாபாரிகள் ஏலம் எடுத்து சென்றனர்.

## தஞ்சையில் இருந்து சேலத்துக்கு 1,200 டன் புழுங்கல் அரிசி சரக்கு ரெயிலில் அனுப்பப்பட்டது



தஞ்சையில் இருந்து சேலத்துக்கு 1,200 டன் புழுங்கல் அரிசி சரக்கு ரெயிலில் அனுப்பி வைக்கப்பட்டது.

நெற்களஞ்சியம்

தமிழகத்தின் நெற்களஞ்சியமாக தஞ்சை மாவட்டம் விளங்கி வருகிறது. இங்கு குறுவை, சம்பா, தாளடி என 3 போகம் நெல் சாகுபடி நடைபெறும். இது தவிர கோடை நெல் சாகுபடியும் நடைபெறுவது வழக்கம். இவ்வாறு சாகுபடி செய்யும் நெல், தமிழக அரசு நேரடி நெல் கொள்முதல் நிலையங்களின் மூலம் கொள்முதல் செய்யப்பட்டு வருகிறது.

இவ்வாறு கொள்முதல் செய்யப்படும் நெல், தமிழகத்தின் பல்வேறு மாவட்டங்களுக்கு அரவைக்காக ரெயில் மற்றும் லாரிகள் மூலம் அனுப்பி வைக்கப்படும். மேலும் தஞ்சை மாவட்டத்தில் உள்ள அரசு மற்றும் தனியார் அரிசி ஆலைகளுக்கும் அரவைக்காக அனுப்பி வைக்கப்படுவது வழக்கம். அவ்வாறு அரவைக்கு அனுப்பி வைக்கப்பட்ட நெல் பின்னர் பல்வேறு மாவட்டங்களுக்கு பொது வினியோகத்திட்டத்தின் கீழ் வினியோகம் செய்ய அரிசி மூட்டைகளாக அனுப்பி வைக்கப்படுகிறது.

1,200 டன் புழுங்கல் அரிசி

அதன்படி தஞ்சை மாவட்டத்தில் உள்ள பல்வேறு அரிசி ஆலைகள் மற்றும் குடோன்களில் இருந்து 1,200 டன் புழுங்கல் அரிசி மூட்டைகள் தஞ்சை ரெயில் நிலையத்துக்கு லாரிகள் மூலம் நேற்று கொண்டுவரப்பட்டன. பின்னர் அந்த அரிசி மூட்டைகள் தஞ்சையில் இருந்து சரக்கு ரெயில் மூலம் சேலத்துக்கு 21 வேகன்களில் அனுப்பி வைக்கப்பட்டன.

## திருவாரூரில் இருந்து கன்னியாகுமரிக்கு பொதுவினியோக திட்டத்திற்காக 1,250 டன் அரிசி சரக்கு ரெயிலில் அனுப்பி வைக்கப்பட்டது



திருவாரூர்,

திருவாரூர் மாவட்டத்தில் நேரடி நெல் கொள்முதல் நிலையங்கள் மூலம் விவசாயிகளிடம் நெல் கொள்முதல் செய்யப்பட்டது. இந்த நெல் அரவை மில்லுக்கு அனுப்பி வைக்கப்பட்டு அரிசி மூட்டைகளாக தயாரானது. இந்த அரிசி மூட்டைகள் பொதுவினியோக திட்டத்திற்காக பல மாவட்டங்களுக்கு ரெயில் மூலம் அனுப்பி வைக்கப்பட்டு வருகின்றன. அதன்படி நேற்று திருவாரூரில் இருந்து அரிசி மூட்டைகள் லாரிகள் மூலம் ரெயில் நிலையத்திற்கு கொண்டு வரப்பட்டன. பின்னர் அந்த அரிசி மூட்டைகளை லாரியில் இருந்து தொழிலாளர்கள், சரக்கு ரெயிலில் ஏற்றினர். அதன்பின்னர் 1,250 டன் பொதுரக அரிசியுடன் திருவாரூரில் இருந்து கன்னியாகுமரிக்கு புறப்பட்டு சென்றது.